*3*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ஆவிக்குரிய தன்மை (3)

*ஆவிக்குரிய தன்மை பற்றி, முந்திய பாடத்தில் நமது கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, நாம் உண்மையான ஆவிக்குரிய தன்மையின் பண்புகளில் இன்னும் அதிகமானவற்றை இங்கு ஆராய்வோம்.*

*5. இது ஊக்கமான ஜெபமாக உள்ளது (யாக். 5:13-16). ஜெபம் என்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு மூலைக்கல்லாக உள்ளது. இடைவிடாமல் ஜெபியுங்கள் (1 தெச. 5:17). ஜெபமற்ற தன்மை என்பது நமது மாபெரும் பலவீனமாக உள்ளது, இது நமது மாபெரும் பாவமாக உள்ளது. நாம் தேவனைப் பெறுவதற்காக ஜெபிக்க வேண்டும், நம்முடைய விருப்பங்களைப் பெறுவதற்காக அல்ல. ஜெபித்தல் என்பது, வேலைக்கு வந்துவிட்டதாக அறிக்கை தருதல் போன்றதாக உள்ளது. முதலாவது, தேவன் எனக்குத் தேவையாயிருந்தார் ... பின்பு நான் தேவனை விரும்பினேன் ... இப்போது நான் தேவனைக் கொண்டிருக்க வேண்டும். ஜெபித்தல் என்பது தேவனைப் பற்றி ஆழ்ந்தறிவு ஒன்றைக் கொண்டிருத்தல் என்பதாக உள்ளது. ஜெபித்தல் என்பது தேவனுடைய தீர்ந்து போகாத வல்லமையை அடைய வழிபெறுதல் என்பதாக உள்ளது. பரிந்து பேசுகின்ற ஜெபம் என்பது நமக்கு முற்றிலும் புதிய உலகம் ஒன்றைத் திறக்கிறது.*

*6. இது தேவனாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது கிறிஸ்துவுடன் தேவனுக்குள் வாழுதல் என்பதாக உள்ளது (கொலோ. 3:1-4). கிறிஸ்தவம் ஒரு "தேவனுடைய" மதமாக உள்ளது, இது சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பயபக்திக்குரிய இராஜரீகத்தின்மீது கவனம் செலுத்துகிறது. "தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு" (1 தீமோ. 4:7ஆ). நம் எல்லாருடைய வாழ்வும் தேவனுடைய சித்தத்தின் கீழ் உள்ளது. தேவனில் விசுவாசம் கொள்ளுதல் என்பது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் வாழுதல் என்பதாக உள்ளது: "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்" (1 பேது. 1:15, 16). ஆவிக்குரிய தன்மை என்பது நமது வாழ்விற் கான தேவனுடைய சித்தத்தை அன்றாடம் புரிந்துகொள்ளுதல் என்பதாக உள்ளது. தேவன் தமது சாயலாக மனிதனைப் படைத்தார் (ஆதி. 1). தேவனை மனித சாயலில் ஏற்படுத்துவதைக் காட்டிலும், தேவனை நயவஞ்ச கமாக மறுத்தலித்தல் வேறு எதுவும் இல்லை. ஆவிக்குரிய தன்மை என்பது நித்தியமான, அன்றாடம் தேவனுடன் தங்கியிருத்தல் என்பதாக உள்ளது.*

*ஆவிக்குரிய தன்மை என்பது தேவனுக்கு கீழ்ப்படிதலுடன் இருத்தல் என்பதாக உள்ளது.*

*உங்கள் பணி முறைமைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டாம். உங்கள் முன்னுரிமைகளை முறைமைப்படுத்துங்கள். உங்கள் அன்றாட திட்டமிடுதலில் தேவன் ஆதிக்கம் செலுத்த வேண்டும். முன்னுரிமைப் பட்டியலில் இருந்து தேவனை தூக்கியெறியும் அளவுக்குப் போதிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் எதுவாயிருக்க முடியும்? தேவனுடன் நாளைத் தொடங்குங்கள், தேவனுடன் நாளை முடியுங்கள், தேவனுடன் நாள் முழுவதும் நடவுங்கள்.*

*7. இது கிறிஸ்துவாக உள்ளது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது ..." (பிலி. 2:5-8). "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18). கிறிஸ்துவுக் குள் நாம் புது சிருஷ்டியாயிருக்கின்றோம் (2 கொரி. 5:17). தலையாகிய கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலேயும் வளருகின்றோம் (எபே. 4:15). ஆவிக்குரிய தன்மை என்பது நமக்குள் கிறிஸ்துவை உருவாக்குதலாக உள்ளது. நாம் பரிசுத்த ஆவியானவரைப் போன்றல்ல, ஆனால் கிறிஸ்து வைப் போன்றவர்களாக வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரே நமக்குப் போதிக்கின்றார். கிறிஸ்தவம் என்பது கிறிஸ்துவாக உள்ளது, முற்றுப்புள்ளி - கிறிஸ்துவுடன் கூட இன்னொன்று என்பதாக இருப்பதில்லை என்று கொலோசெயருக்கு எழுதிய நிருபம் நமக்கு போதிக்கிறது. எவரொருவரும் ஒரே வேளையில் கிறிஸ்துவின் மீதும் தம்மீதும் கவனம் செலுத்த முடியாது. இயேசு நமக்கு ஒரே கட்டளை கொடுத்துள்ளார்: ''என்னைப் பின்பற்றுங்கள்."*

*8. இது பரிசுத்த ஆவியானவராக உள்ளது. ஒருவர், ஆவியானவரின்றி ஆவிக்குரிய தன்மை கொண்டுள்ளதாக எவ்வாறு உரிமைகோர முடியும்? நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் மீண்டும் பிறந்தவர்களாக (யோவா. 3:5), ஆவியானவரால் வழிநடத்தப்பட்டவர்களாக (ரோமர் 8:14), ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக (எபே. 5:18) இருக்கின்றோம். நாம் ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (ரோமர் 8:6). ஆயினும், ஆவியானவருடைய கவனம் செலுத்துதல் என்பது ஒருக்காலும் அவர்மீதே இருந்ததில்லை; அவர் தேவன்மீது அல்லது கிறிஸ்துவின்மீது கவனம் செலுத்தினார். ஆவியானவரை மேம்படுத்துதல் என்பது ஆவியான வரைத் தூஷித்தலாக உள்ளது. கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்காகவே ஆவியானவர் நம்மிடையில் செயல்படுகின்றார்.*

*9. இது சபையாக உள்ளது. நாம் யாவருமே (யாரோ ஒருவரால்) சபையாகிய ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றோம். நாம் யாவரும் அந்தக் குடும்பத்தின் அங்கமாக உள்ளோம். சமூகம் என்ற வகையில் நாம் யாவரும் ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தருடைய பந்தியில் கூடிவருகின் றோம். தனிநபர்கள், சமூகத்திற்கு மேலாகத் தங்களை உயர்த்துகின்ற எந்தக் குழுவும் உயிர் பிழைக்க முடியாது. உடலில் இருந்து வெட்டப்பட்ட ஒரு*

*கையானது செயல்பட முடியாது. எனக்கு நீங்கள் தேவை, நான் உங்களுக்கு தேவை. தேவனுடன் நமது அன்றாட நடையானது ஒரு சபையின் நடையாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது தனிப்பட்டது என்றாலும், அது பொதுவானதாகவும் உள்ளது. ஒரு குடும்பத்தில் குழந்தை ஒன்று பிறக்கின்றது. ஒரு குழந்தை தனது பெயரை, அடையாளத்தை, மற்றும் தொடர் வாழ்வை அந்தக் குடும்பத்தில் மாத்திரம் பெறுகின்றது. ஆவிக்குரிய தன்மை என்பது இணைவு வாழ்வாக உள்ளது (இது குடும்பம் சார்ந்ததாக உள்ளது).*

*10. இது ஒரு அன்றாட பணியாக உள்ளது. வாழ்வானது அன்றாடம் நீடிப்பதாக உள்ளது. திருமணம் அன்றாடமாக உள்ளது. பணி அன்றாடமாக உள்ளது. நட்புறவு அன்றாடமாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை நமது அன்றாட உழைப்புக்களில் தன்னையே காட்சிப்படுத்துகிறது. உங்களது நாளில் என்ன நடந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், மக்களைச் சரியாக நடத்துங்கள்! ஆவிக்குரிய தன்மை என்பது ஒரு மன அமைவாகவும், வாழ்வு அமைவாகவும் உள்ளது. ஒரு குடிமைக் கழகத்தைக் காட்டிலும் கர்த்தருடைய சபைக்கு அதிகமான ஒப்புக்கொடுத்த தன்மை தேவைப்படுகிறது! பயிற்றுவிக்கப்படாத, தயாராய் இல்லாத போர்வீரர்கள் யுத்தத்தில் பயனற்றவர்களாக இருக்கின்றார்கள்! அன்றாட உயிர்வாழுதலில் விட அதிகமாக, இடர்ப்பாட்டு வேளையில் தான், மனிதன் தேவனுடைய பிரசன்னத்தை நாடுகின்றான் என்பது பரிதாபத்திற்குரியதாக உள்ளது. இடர்ப்பாட்டு வேளையில் ஜெபிக்க வேண்டுமென்று ஒருவரும் மக்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை! "தயாராக உள்ள" ஒரு மனிதர் "தயாரித்துக் கொள்ளத்" தேவையில்லை. நாம் இறப்பதற்கு முன்பு, நாம் ஏன் பிறந்தோம் என்பதை நாம் கண்டறிய வேண்டும்.*

*11. இது சிட்சிக்கப்படுதலாக உள்ளது. வளமைத் தன்மை வாய்ந்த சுவிசேஷம் தோல்வியடைகிறது! தேவன் தாம் அன்புகூருகின்றவர்களைச் சிட்சிக்கின்றார் (எபி. 12:5-11). நல்ல பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை ஒழுக்கத்திற்கு உட்படுத்துகின்றார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது மென்மையானதாக உள்ளது; அதே அளவுக்குச் சமமாக ஆவிக்குரிய தன்மை என்பது கடினமானதாகவும் உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது சுயத்தை மறுத்தல் மற்றும் நமது சிலுவைகளை ஏற்றுக் கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது. இரட்சிப்பு என்பது ஒரு உரிமைகோரப் படுதலாக இருப்பதில்லை; இது ஒரு வளர் செயல்முறையாக உள்ளது.*

*12. ஆவிக்குரிய தன்மை என்பது நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்ப்பதாக உள்ளது!*

# இயேசுவைப் பின்பற்றுதல்

## எபேசியர் 1:1-14

*"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபிரெயர் 13:8).*

*ஒரு வேலையானது அந்த வேலையைச் செய்பவரைக் காட்டிலும் மேலானதாக இருக்க முடியாது. கிறிஸ்தவமானது கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலானதாக இருக்க முடியாது. கிறிஸ்தவர்கள் தாங்கள் போதிப்பதை விசுவாசிக்க வேண்டும். நாம் விசுவாசிப்பதை உண்மை யாகவே நாம் விசுவாசிக்க வேண்டும். "உண்மையிலேயே நாம் விசுவாசிக் கின்றோமா?" என்பதே எப்போழுதும் எண்ணத்தில் இருக்கிற கேள்வியாக உள்ளது. நாம் யார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்; நாம் யாராயிருக்கின்றோமோ, அப்படியே இருக்க வேண்டும்.*

*தற்கால அமெரிக்காவில், அதிபர் தேர்தலில், ஒரு அரசியல்வாதி, "கருக்கலைப்பு என்பது ஒழுக்க ரீதியில் கொலையாக உள்ளது" என்று எழுதியுள்ளார். மேலும் அவர், "அரசியல் ரீதியாக நான் விருப்பத் தேர்வை ஆதரிப்பவனாக இருக்கின்றேன்" என்றும் கூறுகின்றார். இந்த அரசியல்வாதி தாம் நம்புகின்றதை நம்புவது இல்லை என்பது தெளிவாகிறது! இது அரசியல் வாதிகளுக்குள் போதிய அளவு மோசமானதாக உள்ளது; இது கிறிஸ்தவர் களில் தேவதூஷணம் என்பதாக உள்ளது.*

*ஆதி சபையார் தங்கள் உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். ஏன்? ஏனென்றால் அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்கள் தங்கள் விசுவாசம் முற்றான உண்மை என்று அறிந்தார்கள், அது எந்த விதமான போட்டியாளர் களையும் கொண்டிருக்க முடியாது என்றும், அது எவ்விதமான விட்டுக் கொடுத்தலையும் ஏற்றுக் கொள்ளாது என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். கிறிஸ்தவம் உண்மையானது என்றால், நான் ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். நீங்களும் ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டும். வேதாகமக் கிறிஸ்தவம் என்பது தனிப்பட்டதாக, இறுக்கமானதாக, குறுகலானதாக உள்ளது; இது உண்மையும் சரியானதாகவும் கூட இருக்கிறது. இதை நாம் உண்மையிலேயே நம்புகின்றோமா?*

*தேவனுடன் நமது அன்றாட நடை என்பது தேவனுடனான ஒரு கிறிஸ்தவ வாழ்வாக உள்ளது. நமது கலாச்சாரத்திற்கு, வாழ்விற்கான பயன்பாடு தத்துவம் ஒன்று மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்றது. உங்கள் வாழ்க்கை என்னவாக உள்ளது? வாழ்வில் உங்கள் பிரதான இலக்கு என்ன? இதை இயேசு தமது ஆழ்ந்தறிவுமிக்க மலைப்பிரசங்கத்தில் எடுத்துரைத்தார் (மத். 5:6). இதுவே வாழ்வதற்கான வழி என்று இயேசு*

கூறினார். பாக்கியங்கள் நமது "எண்ணப்போக்குகளை" விவரிக்கின்றன; நமது உள்ளான பண்பு நமது புறம்பான நடைமுறைகளைத் தீர்மானிக்கிறது. இதனால்தான் கிறிஸ்தவரல்லாதவர்கள் கிறிஸ்தவர்களைப் போன்று செயல்படுவதென்பது எதிர்பார்க்கப்பட முடியாததாக உள்ளது. நம்மில் ஒரு சிலர், ஒவ்வொரு நாளின் எண்ணப்போக்குகளும் செயல்பாடுகளும் எவ்வளவு வல்லமை நிறைந்தவைகளாய் இருக்கின்றன என்பதை அறிகின்றோம். ஒரு குறிப்பிட்ட வழியில் வாழ்தல் என்பது, தேவன் தேவனாக இருக்கின்றார் என்பதை விசுவாசித்தலாக உள்ளது. இது "பரிவு காட்டும்" கிறிஸ்தவத்திற்கான வேளையல்ல. பிரதான கட்டளை இன்னும் நிலைநிற்கிறது: ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மாற். 16:15). வாழ்வின் எல்லா அம்சங்களிலும் முதலில் விசுவாசமே முறிபடுகிறது. உங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டும். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20:31).

## உண்மையான ஒரே தேவனில் நாம் விசுவாசம் கொள்ள வேண்டும்

தேவன் - தேவன் - தேவன்! தேவனே இங்கு விஷயமாக உள்ளார். இந்த தேவன், ஒரே இராஜரீகமான, நித்திய, படைக்கின்ற, எல்லையற்ற, மாற்றப் பட முடியாத, பரிசுத்த, சர்வ வல்ல தேவனாக உள்ளார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1); "இஸ்ரவேலே கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக'' (உபா. 6:4, 5). இயேசு விசுவாசிக்கின்றதையே கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள். இயேசு இந்தக் கட்டளையை மற்ற எல்லாக் கட்டளைகளையும் விட முன்னுரிமை வாய்ந்ததாக உறுதிப்படுத்தினார் (மத். 22:37-40). கிறிஸ்தவம் என்பது தனிப்பட்டதாக, முற்றானதாக, உபதேசத்துவம் வாய்ந்ததாக, சகிக்கக் கூடாததாக உள்ளது. சத்தியமும் இதே வழிமுறையில்தான் உள்ளது. சத்தியமாயிருத்தல் என்றால் முற்றான தன்மை வாய்ந்து இருத்தல் என்பதாக உள்ளது. யெகோவா என்ற ஒரே தேவனே இருக்கின்றார் (யாத். 3ன் மாபெரும் "இருக்கிறவராக இருக்கிறேன்" என்பவர்).

தேவன் இருக்கிறார் என்றால், வேறு எந்த விஷயமும் ஒரு பொருட்டல்ல; தேவன் இல்லையென்றால் வேறு எந்த விஷயமும் ஒரு பொருட்டல்ல. எல்லாவற்றையும் பற்றிப்பிடிப்பதற்குத் தேவன் மையத்தில் இருக்கின்றார். தேவனின்றி ஒழுக்கநெறி இருக்க முடியாது - எல்லா விஷயங்களும் அனுமதிக்கப்பட்டு விடும். தேவனை இழந்து நின்று, மற்ற எல்லாவற்றையும் கொண்டிருத்தலைக் காட்டிலும், தேவனைக் கொண்டிருந்தது மற்ற எல்லாவற்றையும் இழந்து நிற்பது எவ்வளவோ

*மேன்மையானதாக உள்ளது. (இதைப் பற்றி இயேசு மத்தேயு 16:24-26ல் பேசினார்.) தேவனுடைய நபர்த்துவம், இடம், அதிகாரம் ஆகியவற்றைப் புறக்கணித்தலே எந்த ஒரு சபையின் அல்லது நபரின் வீழ்ச்சியாக உள்ளது. தேவன் உங்களுக்கு தேவை என்பது உங்களுடைய பிரச்சனையாயிருக் கையில், தேவன் மட்டுமே உங்கள் தீர்வாக இருக்க முடியும். மாபெரும் இறையியல் மாபெரும் தேவனை வேண்டிக்கேட்கிறது! நாம் யாவருமே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படிக்கே பிறக்கின்றோம். நாம் யாவரும் தேவசாயலாகவே உருவாக்கப்பட்டுள்ளோம். தேவனின்றி நம்மால் [இருக்க] முடியாது; நாமின்றி தேவன் [இருக்க] மாட்டார். தேவனே நமது ஆவிக்குரிய வாழ்வின் செயல்கள் அனைத்திற்கும் ஆதார மூலமாக இருக்கின்றார். எசேக்கியேலின் புத்தகத்தில் தேவன், "இவ்விதமாக நீங்கள், நானே கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" என்று அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் கூறினார். தேவனின்றி மனிதன் தனிமையில் நடக்கின்றான்.*

*வேறே தேவன் இல்லை! பத்துக் கட்டளைகளில் முதலாவது கட்டளை, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத். 20:3) என்பதாக உள்ளது. யோவான் 17:3, "ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று கூறுகிறது. சபையானது தேவனால் வழிநடத்தப்படட்டும்! நாம் உண்மையாகவே தேவனை அறிந்திருந்தால், நாம் ஒருக்காலும் பாவம் செய்ய மாட்டோம். நான் எவ்விதமாக வாழ்கின்றேன் என்பது, நான் தேவனைப் பற்றி உண்மையில் எதை விசுவாசிக்கின்றேன் என்பதற்குச் சாட்சியாக உள்ளது. "ஜீவனுள்ள தேவனு டைய கைகளில் விழுகிற பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31). அவரை அறியுங்கள். அவரை விசுவாசியுங்கள். அவரில் நம்பிக்கை வையுங்கள். அவரில் அன்புகூருங்கள். அவர் கூறுவதைக் கவனியுங்கள். அவருக்குக் கீழ்ப்படியுங்கள். தேவன் சர்வாதிகாரம் உள்ளவராக இருக்கின்றாரா? தேவன் கூறுகின்றவற்றை நாம் செய்வோமா? தேவனை அறிந்தும் அவர் கூறுவதைச் செய்யாமல் இருத்தல் என்பது அவரை அறிந்துள்ள விதமாக இருப்பதில்லை. தேவன் தேவனாக இருந்தால், மனிதர் அவர் கூறுவதைக் கவனிக்க வேண்டும். "கவனித்தல்" மற்றும் "கீழ்ப்படிதல்" ஆகிய இரண்டிற் கும் எபிரெய மொழியில் ஒரே வார்த்தையே உள்ளது. தேவனில் விசுவாசம் கொள்ளாதிருக்க மனிதன் எந்த சாக்குப்போக்கும் கொண்டிருப்பதில்லை (ரோமர் 1:18-23). அறிந்த தேவனிடத்தில் [உங்களால்] அறியப்பட்டிராத எதிர்காலத்தை ஒப்புவிக்க ஒருபோதும் அஞ்சாதீர்கள். மாற்றம் என்பது ஒவ்வொரு வினாடியிலும் வருகிறது. மாற்றமில்லாத ஒருவரைப் பற்றிக் கொள்ளுதல் என்பதே மாற்றத்திற்கான தீர்வாக இருக்கிறது. தேவன் மாறுவதில்லை.*

# நாம் இயேசுவில் விசுவாசமாயிருக்க வேண்டும்

***தமது வகையில் அவர் ஒரே ஒருவராக இருக்கின்றார்***

*படைப்பாளராகிய தேவன், இயேசுவில் மனித இனத்துடன் இணைந்தார். இதுவே சுவிசேஷமாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு திரு அவதாரத்தை வேறு எந்த மனிதரும் உரிமைகோர இயலாது. இயேசு, தேவனுடைய ஒரே பேறான குமாரனாயிருக்கின்றார் (யோவா. 3:16). இதை, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து (அப். 2) கிறிஸ்தவர்கள் அறிந்து, விசுவாசித்து, பிரசங்கித்திருக்கின்றார்கள். ஆயினும், நமது நவீன கலாச்சார மானது பன்மைத்தன்மையை (மாறுபட்ட மதகொள்கைகள் போன்ற வற்றின் ஒருமைப்பாட்டு முயற்சி) அணைத்துக் கொண்டுள்ளது. சகிப்புத் தன்மை என்ற பெயரில், கலாச்சாரமானது இயேசு பலரில் ஒருவர் என்று உபதேச ரீதியாக உறுதிப்படுத்துகின்றது. நாமகரணக் கூட்டத்தார், பல ஆண்டுகளாக "ஒரு சபை இன்னொரு சபையைப்போன்றே நல்லதாகவே உள்ளது" என்று சத்தமிட்டுள்ளார்கள். இதை அவர்கள் முழுமையாகச் சிந்தித்ததில்லை. அது உண்மையாக உள்ளதென்றால், "ஒரு மேசியா (கிறிஸ்து) இன்னொருவரைப் போன்றே நல்லவராக இருக்கின்றார்" - "ஒரு தேவன் இன்னொருவரைப் போன்றே நல்லவராகவே இருக்கின்றார்" - "எல்லாச் சாலைகளும் பரலோகத்திற்கே வழிநடத்துகின்றன." இந்தக் கருத்து வேத வசனங்களை மீறுவதாக உள்ளது; இது ஒரு கருத்தைக் கூட ஏற்படுத்துவதில்லை! இரண்டு தேவர்கள் ஒன்றாயிருக்கின்றார்கள் என்பது மிகவும் பலர் உள்ளனர் என்பதாகிறது! இரண்டு மேசியாக்கள் ஒன்றாயிருக் கின்றார்கள் என்பது மிகவும் பலர் உள்ளனர் என்பதாகிறது! இரண்டு சபைகள் ஒன்றாயிருக்கின்றன என்பது மிகவும் பல உள்ளன என்பதாகிறது! எபேசியர் 4:1-6ஐ வாசிக்கவும்.*

*வரலாற்றாளர் ஒருவர், வரலாற்றில் மாபெரும் மனிதர்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளார் - அதில் முகம்மது நபி, சர். ஐசக் நியூட்டன் ஆகியோருக்குப் பின்னாக இயேசு மூன்றாவதாக வரிசைப்படுத்தப் பட்டுள்ளார். "The Dallas Morning News" என்ற பத்திரிக்கை, "புதிய ஆவிக்குரிய தன்மை" என்பது இப்போது, ஒரு பகுதி இயேசுவாகவும் இருபகுதி புத்தராகவும் உள்ளது என்று சமீபத்தில் கூறியுள்ளது! இது நகைப்பிற்கு இடமானதாக இருப்பது மட்டுமின்றி, தேவதூஷணமாகவும் உள்ளது! நமது அன்றாட நடை என்பது கிறிஸ்துவின் நடையாக உள்ளது. வரலாறு முழுவதிலும் இயேசு தனிச்சிறப்பு வாய்ந்த நபராக, இதுவரை வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் நபராக உள்ளார். கிறிஸ்தவராக இருத்தல் என்பது எவ்வளவு சிலாக்கியமானதாக உள்ளது!*

*இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6) என்று கூறினார். இயேசு உண்மையானவர் மட்டுமின்றி, அவரே சத்திய மாகவும் இருக்கின்றார்! அவர் "உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கி" றார் (யோவா. 11:25). இயேசுவின் "நானே" வசனங்களை வாசித்துப் பாருங்கள். இயேசுவைப் போல் எந்த மனுஷனும் பேசினதில்லை. அவர், "நானே அவர்*

என்று நீங்கள் விசுவாசியா விட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா. 8:24) என்றார்; "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவா. 8:32). இயேசுவைக் காணுதல் என்பது தேவனைக் காணுதலாக உள்ளது (யோவா. 14:9). இயேசு ஜீவ அப்பமாக இருக்கின்றார் (யோவா. 6:48). இயேசு தேவ ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார் (யோவா. 1:29). இயேசு உயிர்த்தெழுந்தார் (லூக். 24:5, 6). முகம்மது இறந்து போயிருக்கின்றார். புத்தர் இறந்து போயிருக்கின்றார். இயேசு உயிருடன் இருக்கின்றார்! இறந்துபோன இரட்சகரால் என்ன பயன்? பலர் கூறியுள்ளபடி, "இயேசு ஒரு பொய்யராக, ஒரு பித்தராக இருக்க வேண்டும் அல்லது அவர் [ஒருவரே] *கர்த்தராக* இருக்க வேண்டும்."

கொலோசெயருக்கு எழுதிய நிருபம் ஒரு பொருத்தமான நிருபமா யிருக்கிறது. ஒருவேளை இதுவே இன்றைய நாட்களில் நமது கலாச்சாரத்தில் மிகவும் அவசியமானதாக இருக்கலாம். பவுல், "*கிறிஸ்துவே* [எல்லாமுமாக உள்ளார்]" என்று கூறினார். எபிரெயருக்கு எழுதிய நிருபம் - இயேசுவின் மாபெரும் சிறப்புத்தன்மையை [வேறேவருக்கும் ஒப்பிடப்பட முடியாத அவரது சிறப்புத்தன்மையை] விவரித்தல் என்ற - ஒரு மாபெரும் காரணத் திற்காக எழுதப்பட்டது. கிறிஸ்தவம் என்பது சிக்கலானதாக இருப்பது இல்லை: (1) தேவன் நமக்கு இயேசுவைக் கொடுத்தார், மற்றும் (2) நாம் நமது அன்றாட நடையில் தேவனுக்கு மீண்டும் இயேசுவைக் கொடுக்கின் றோம். தேவன் எல்லாவற்றையும் சிலுவையில் துணிவாய் பணயம் வைத்தார்; நாம் எல்லாவற்றையும் விசுவாசத்தினால் தைரியமாக செயல்படுகின்றோம். நாம் வேதாகம ரீதியானவர்களாயிருப்பதினால் ஏற்புடையவர்களாவதற்கு தைரியமானவர்களாயிருக்கின்றோமா? இயேசு கிறிஸ்து நாம் விரும்புகின்ற வகையிலான நபராயிராமல் போகலாம், ஆனால் அவரே நமக்குத் தேவையான நபராக உள்ளார்!

**அவர் கர்த்தராய் இருக்கிறார்**

இயேசு ''எஜமானராக'' இருக்கின்றார். நமது கலாச்சாரமானது, அதிகாரத்துவத்தை மறுத்து, ''கர்த்தர்'' என்ற வார்த்தையை வெளியே எறிந்துள்ளது; இருப்பினும் இது ஒரு ஆழ்ந்தறிவான வேதாகம வார்த்தை யாக உள்ளது. கர்த்தர் என்பவர், "ஒரு நபர் சார்ந்திருக்க வேண்டிய, முடிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளவராக" இருக்கின்றார். இந்த பூமியில் இயேசு "தம்முடையது'' என்று அழைக்கப்படக் கூடாதது என்று ஒரு அங்குலம் கூட இருப்பதில்லை. இயேசுவே நம்மைப் படைத்தார்; இயேசுவே நம்மை மீட்டார்; இயேசுவே ஒவ்வொரு அம்சத்திலும் கர்த்த ராக இருக்கின்றார். அன்றாட நடை என்பது ஒருவர் இயேசுவின் கர்த்தத் துவத்தின் கீழ் வாழ்தல் என்பதாக உள்ளது. பேதுரு, பெந்தெகொஸ்தே நாளன்று தமது முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பின்வரும் வார்த்தை களுடன் முடித்தார்: "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (அப். 2:36). இயேசுவே மனிதருக்குத் தேவனுடைய கடைசியான மற்றும்

நிறைவான வார்த்தையாக உள்ளார் (எபி. 1:1-3). ஒருவருடைய வாயினால் அறிக்கை செய்தல் என்பது இரட்சிப்பை விளைவிக்கிறது (ரோமர் 10:10). இயேசுவே, எல்லாவற்றிலும் போதுமான கர்த்தராக உள்ளார்.

தேவனே இயேசுவைக் கர்த்தராக்கினார். மனிதர்கள் அதைச் செய்யவில்லை. மனிதர்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், இயேசு எல்லாருக்கும் கர்த்தராகவே இருக்கின்றார். ஒரு நாளிலே, "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்த ரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்" (பிலி. 2:11). "சந்தேகத் தோமா" தமது மனதைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு முன்பாக, தோமா, "என் ஆண்டவரே, என் தேவனே!" என்று கூறினார் (யோவா. 20:28). நாமும் கூட நமது மனநிலையைச் சரி செய்து கொள்ள வேண்டியுள்ளது. கர்த்தத்துவம் என்பது கீழ்ப்படிதலை வேண்டிக் கேட்கிறது. இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக். 6:46) என்று கூறினார்.

இயேசு ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கின்றார். முதலில் அவர் ஆண்டவராக இருக்கின்றார்! மனிதர்கள் இயேசுவை ஒரு இரட்சகராகவும் ஆசீர்வதிப்பவராகவும் விரும்புகின்றார்கள் - ஆயினும் அவர்கள் அவரது கர்த்தத்துவத்தைப் புறக்கணிக்கின்றார்கள். இயேசுவைக் கர்த்தரென்று ஏற்று நாம் அவருக்குக் கீழ்ப்படியாத வரையிலும் அவர் நமது இரட்சகராக இருக்க முடியாது! இயேசு தாம் கட்டளையிட முடியாதவர் களை அவர் இரட்சிக்க முடியாது. இயேசு புதிய ஏற்பாட்டில் இருபது அல்லது அதற்கும் அதிகமான இடங்களில் மேசியா (இரட்சகர்) என்று பட்டம் சூட்டப்பட்டுள்ளார். அவர் நானூற்றுக்கும் அதிகமான இடங்களில் கர்த்தர் என்று அறிவிக்கப்பட்டுள்ளார். நமது அன்றாட நடை கிறிஸ்து[வுடன் கூடிய] நடையாக உள்ளது. விசுவாசத்தை விசுவாசத் தன்மையிலிருந்து பிரிக்காதீர்கள்.

> பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிற வனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே!" என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத் தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்பார்கள். அப்பொழுது நான் "ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத். 7:21-23).

"என்னிடத்தில் வாருங்கள்" (மத். 11:28-30) என்பது "என் பின்னே வாருங்கள்" (மத். 4:19) என்று பெருக்கம் செய்யப்பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டுள்ளோம் (கலா. 2:20). நாம் கிறிஸ்துவுடனே கூட முன்குறிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 8:29). நாம்

*அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாற வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (2 கொரி. 3:18). நாம் அவரது உதாரணத்தைப் பின்பற்றுகின்றோம் (1 பேது. 2:21).*

*இயேசு, நமக்கு ஜீவனை அளிக்கும்படிக்கு,*
*நமது வாழ்வின் மூலமாக அவர் வாழும்படிக்கு,*
*நமக்காகத் தமது ஜீவனைக் கையளித்தார்.*

*இயேசு எனக்குள் உருவாக்கப்பட்டுள்ளாரா?*

***அவர் நமது இரட்சகராக இருக்கின்றார்***

*இயேசு மாத்திரமே நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வர முடியும்; வேறு வழி எதுவும் இல்லை! தேவன், தம்முடைய குமாரன் கெத்செமெனே யில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த வேளையில், அவருக்கு “இல்லை” என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில், அவர் “வேறு வழியெதுவும் இல்லை!” என்றே சத்தமிட்டுக் கொண்டிருந்தார். மனிதன் பாவத்தில் இழந்து போகப் பட்டிருந்து, நரகம் செல்லும்படி ஆக்கினைத் தீர்ப்பைப் பெற்றிருந்தான். அவன் தன்னையே இரட்சித்துக் கொள்ள முடியாதிருந்தது; அவன் இரட்சிப்பை வாங்க இயலாதிருந்தது. மனிதனால் செய்ய இயலாததை, தேவன் மனிதனுக்குள் செய்தார். இயேசு “தேவ ஆட்டுக்குட்டியாக” இருக்கின்றார். பாவம், மரணம், நரகம் மற்றும் சாத்தான் ஆகியவற்றைத் தோற்கடிக்க, தேவன், தேவனே இயேசுவில் மனித இனத்துடன் இணைந்தார். எல்லாருக்காகவும் ஒருவர் மரித்தார் (2 கொரி. 5:15). தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை ஒப்புரவாக்கினார் (2 கொரி. 5:19-21). நமக்கு நாமே செய்ய இயலாததை நமக்காகச் செய்யும்படிக்குத் தேவன் மனித இனத்துடன் சேர்ந்து கொண்டார் என்ற சுவிசேஷ செய்தியே நமது அஸ்திபாரமாக உள்ளது. கிறிஸ்துவை மாத்திரம் ஏன் பிரசங்கிக்க வேண்டும்? பிரசங்கிப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை, [எனவே அவரைப் பிரசங்கிக்க வேண்டும்]! இயேசு ஒருவரே இரட்சகராக உள்ளார்! இயேசுவைத் தவிர வேறு எவரிடத்திலும் இரட்சிப்பு இல்லை, இவரே கிறிஸ்துவாக, இவரே மேசியாவாக, இரட்சகராக உள்ளார். என்ன ஒரு இரட்சகர்!*

*பாவிகளுக்கு, அவர்கள் இரட்சிக்கப்படுதலைக் காட்டிலும் அதிகமானது தேவைப்படுகிறது: அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப்படுகின்றார். இரட்சிப்பு கொடுக்கப்பட்ட நிலையிலும்கூட, பாவிகள் மீண்டும் ஒரே ஒரு நிமிடத்தில் பாவிகளாகி விடுவார்கள். இயேசு நமக்காக வேண்டுதல் செய்வதற்காக எப்போதும் வாழ்கின்றார் (எபி. 7:25). இயேசு ஒருவரே தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக உள்ளார் (1 தீமோ. 2:5). இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் வேறு எந்த நாமும் கொடுக்கப்படவில்லை (அப். 4:11, 12). இயேசு மனிதர்களை அப்படியேவோ அல்லது சாத்தியக்கூறுள்ள வகையிலோ இரட்சிப்பதற்கு வரவில்லை; அவர் பாவிகளை இரட்சிக்கப்படக் கூடியவர்களாக்குவதற்*

*காகவே வந்தார். இயேசுவற்ற நிலையில் நாம் நமது பாவங்களில் மரிக்க மாத்திரமே முடியும் (அப். 4:12).*

*இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது, "தேவன் சரியானவராக இருக்கின்றார்" என்று கூறுதலாக உள்ளது. பாவம்தான் பிரச்சனையாக உள்ளது; இதற்கு சிலுவை என்பதே பதிலாக உள்ளது. இயேசு நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு உதவி செய்வதில்லை - இயேசுவே நமது வாழ்வாக இருக்கின்றார்.*

## இன்றைய நாட்களில் நாம் கிறிஸ்தவத்தை நம்ப வேண்டும்

*நமக்கு எப்பொழுதுமே தேவைப்பட்டவைகள் [தாம்] இன்றைய நாட்களிலும் நமக்குத் தேவைப்படுகிறது: இயேசு கிறிஸ்து! "கிறிஸ்துவுக் குள்" என்ற அல்லது இதற்கு இணையான சொற்றொடர்களைப் புதிய ஏற்பாடானது 119 முறைகள் பயன்படுத்துகிறது. இது "நேற்றைக்கான" அல்லது "நாளைக்கான" கிறிஸ்தவமாயிராமல், "இன்றைக்கான" கிறிஸ்தவ மாக உள்ளது. இயேசு ஒரே தரம் மரித்தார் என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் அறிவிக்கிறது (7:27; 10:10). முதல் நூற்றாண்டில் இருந்த மக்கள் தாங்கள் முதல் நூற்றாண்டில் இருந்ததைக் கூட அறியவில்லை (நமது நாட்காட்டி இதற்குப் பின்புதான் வந்தது). ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் புதிதாகச் சில விஷயங்கள், மாறுதலாகச் சில விஷயங்கள் தேவைப்படுவது இல்லை. "இன்றைய நாட்களின் கிறிஸ்தவத்தை முதல் நூற்றாண்டு" பெற்றிருந்தது. இதுவே நம் யாவருக்கும் தேவைப்படுகிறது - இதுவே நமக்கு எப்பொழுதும் தேவைப்படுகிறது. நீங்கள் ஒரு பழைமையான காரைப் புதுப்பிப்பது போன்று, சபையை மீளக்கட்டியெழுப்புவதில்லை. கிறிஸ்துவே தேவனுடைய நித்தியமான பதிலாக உள்ளார். உங்களுக்குக் கோதுமை தேவைப்படும்போது, நீங்கள் கோதுமை விதையை நடுகின்றீர் கள். உங்களுக்குக் கிறிஸ்தவம் தேவைப்படும்போது, சுவிசேஷ விதையை நடுங்கள் (லூக். 8:11; ரோமர் 1:16). சபையானது தான் பிரசங்கிப்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்; கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை வாழ வேண்டும். இயேசு நேற்று மரித்தார், இன்று காலையில் உயிர்த்தெழுந்து, இன்றிரவு மீண்டும் வரப்போகின்றார் என்பது போல வாழுங்கள்!*

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய*
*இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்*
*போட ஒருவனாலும் கூடாது (1 கொரி. 3:11).*